## தி.மு.க. கூட்டணியில் பிளவுபடுத்தநினைப்பவர்களின் சதித் திட்டம் ஒருபோதும் நிறைவேறாது!

## 2026 சட்டமன்றத் தேர்தலிலும் நாம்தான் வெற்றி பெறுவோம்; திராவிட மாடல் 2.0 ஆட்சியில்

# இந்தியாவுக்கே வழிகாட்டுகிற சாதனைகளைப் படைப்போம்!

## சேலம் – இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 26–வது மாநில மாநாட்டில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

சேலம் ஆக. 18 -

**சேலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் மாநாட்டில் உரையாற்றிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், வருகிற.2026 தேர்தலிலும் எங்கள் கூட்டணிதான் வெற்றி பெறும் என்றும், திராவிட மாடல் ஆட்சியில் இந்தியாவுக்கே வழிகாட்டுகிற சாதனை களைப் படைப்போம்” என்றும் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.8.2025) சேலத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது மாநில மாநாட்டில் ஆற்றிய உரை வருமாறு :-

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 26ஆவது மாநில மாநாடு மூலமாக, செங்கொடித் தோழர் களான உங்கள் எல்லோரையும் சந்திக்கின்ற வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தி தந்திருக்கக்கூடிய என் அன்புக்குரிய தோழர் முத்தரசன் அவர்க ளுக்கு முதலில் என்னுடைய இதயபூர்வமான நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

அவரே குறிப்பிட்டுச் சொன்னார் அண்மை யில் நடந்த ‘காலம்தோறும் கம்யூனிஸ்டுகள்’ நூல் வெளியீட்டு விழாவில், உங்கள் எல்லோ ரையும் சந்திக்க வேண்டும் என்று நான் நினைத்தேன். அதற்கான ஒப்புதலையும் நான் தந்திருந்தேன். ஆனால், உடல்நிலை காரண மாக வர முடியவில்லை என்கின்ற அந்த வருத் தத்தை தீர்க்கக்கூடிய வகையில், இன்றைய நாள் அமைந்திருக்கிறது!

### எப்போதும் அன்பை - நட்புறவை பேணும் கொள்கைத் தோழர்கள் டி.ராஜா - முத்தரசன்!

தோழர் D.ராஜா அவர்களும், தோழர் முத்த ரசன் அவர்களும் கொள்கைத் தோழர்கள் மட் டும் கிடையாது. அதையும் கடந்த ஒரு நட்பு றவை அன்பை எப்போதும் பேணக் கூடிய வர்கள். அவர்களுடைய அன்புக்கும் என்னில் பாதியான சிவப்புச் சிந்தனை கொண்ட கம்யூ னிஸ்ட் தோழர்களின் கொள்கைப் பிடிப்புக்கும் கட்டுப்பட்டு இந்த மாநாட்டில் நான் பங்கேற்க வந்திருக்கிறேன்.

திராவிட இயக்கத்துக்கும், பொதுவுடைமை இயக்கத்துக்குமான நட்பு என்பது, கொள்கை நட்பு! சமூகத்துக்குத் தேவையான நமது கொள்கை வலுவாக இருக்கின்ற காரணத்தால் தான், நம்முடைய நட்பும் வலுவாக இருக்கிறது! ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற இலட்சியத்தின் இரு முகங்கள்தான் திராவிட இயக்கங்களும், பொதுவுடைமை இயக்கங்களும்! கருப்பும் சிவப்பும் சேர்ந்ததுதான் திராவிட முன்னேற்றக் கழகம்! எங்களில் பாதி நீங்கள்! இந்த கொள்கை உறவின் ஆழத்தை, தலைமுறைகள் கடந்தும் நாம் சொல்ல வேண்டும். அப்போதுதான் பல தலைமுறைகள் காக்கப்படும்! கொள்கை முரண்கள் ஒருபோதும் கொள்கை எதிரிகளுக்கு இடம் கொடுத்துவிடக் கூடாது! அதனால், வர லாற்றில் பதிவான இரண்டு நிகழ்ச்சிகளை மட்டும் சுருக்கமாக நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

### தொழிலாளர்களின் பிரச்சினைக்காக கோரிக்கையோடு வரும் முத்தரசன்!

நம்முடைய மதிப்பிற்குரிய முத்தரசன் அவர் களும் ஒரு வேண்டுகோளை எடுத்து வைத் தார். எங்கே சென்றாலும், அவர் கோரிக்கை எடுத்து வைப்பது வழக்கமாக வைத்துக் கொண் டிருக்கிறார். ஏதோ மாநாட்டுக்கு மட்டுமல்ல, நிகழ்ச்சிக்கு மட்டுமல்ல, கோட்டைக்கு வந்தா லும் மனுவோடுதான் வருவார். எதற்காக மனு வோடு வருகிறார் என்றால், தனிப்பட்ட பிரச்ச னைக்காக அல்ல. தொழிலாளர்களின் பிரச்சி னைக்காக, பாட்டாளி மக்களின் உரிமைகளுக் காக அந்த கோரிக்கையை எடுத்து வருவார்.

இதோ, இந்த அரங்கத்துக்கு ‘சேலம் சிறை தியாகிகள் அரங்கம்’ என்று பெயர் சூட்டியிருக்கிறீர்களே, சேலம் சிறையில், 22 கம்யூனிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டபோது, தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் கடுமையாக கண்டித்து எழுதினார்கள். 1950 மார்ச் 5ஆம் நாளை, கண்டன நாளாக கடைப் பிடிக்கச் சொன்னார் தந்தை பெரியார். திராவிடர் கழகம் சார்பில், ஊர்வலமும், கையெழுத்து இயக்கமும் நடத்தப்பட்டது. சிறையில் இருந்த தோழர்கள் விடுதலை செய்யப்பட்டபோது, குத் தூசி குருசாமி அவர்கள், சென்னை ஒற்றை வாடை தியேட்டரில் வரவேற்புக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். இதெல்லாம் வரலாறு! அந்த வரலாற்றை போற்றும் விதமாக இங்கு வருவ தற்கு முன்பு, விமான நிலையத்திலிருந்து இந்த மாநாட்டு நிகழ்ச்சிக்கு வருவதற்கு நாங்கள் வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது, நம்மு டைய அன்புக்குரிய தோழர் முத்தரசன் அவர் கள் ஒரு கோரிக்கை மனுவை என்னிடத்தில் வழங்கினார். வழங்கியது மட்டுமல்ல, அதை வழங்கியதால் நான் மறந்துவிடுவேனோ




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.8.2025) சேலத்தில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது மாநில மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். இம்மாநாட்டில், அமைச்சர்கள் எ.வ. வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், ஆர். ராஜேந்திரன், மரு. மா. மதிவேந்தன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி. ராஜா, மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவர், செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் அப்துல் சமது எம்.எல்.ஏ , கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் தி.வேல்முருகன் எம்.எல்.ஏ., ம.தி.மு.க. செந்தில் அதிபன், திராவிட கழகத்தின் செல்வி மதிவதினி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி, ஆதி தமிழர்பேரவை மாநில துணை பொது செயலாளர் ஏ.டி.ஆர். சந்திரன், கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் அமர்ஜித் கவுர், டாக்டர் கே. நாராயணா, ஆனி ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

என்று கருதி இங்கே அதையும் குறிப்பிட்டுச் சொல்லி, உங்களுக்கு நினைவுபடுத்தி, எனக் கும் நினைவுபடுத்தியிருக்கிறார்.

### சேலத்தில் சிறைக்கைதிகள் நினைவாக மணிமண்டபம்!

அண்ணன் முத்தரசன் அவர்கள் கேட்டு எதையும் நான் தட்டிக் கழித்தது கிடையாது. முடியாது என்று நான் சொல்ல முடியுமா? ஒவ் வொரு மாநாட்டிலும் ஒரு கோரிக்கை வைக்கப் படுகிறது. அதுவும் நிறைவேற்றப்படுகிறது. ஆகையால், இந்த மாநாட்டில் வைத்த கோரிக்கை சேலத்தில் சிறைத் தியாகிகள் நினை வாக விரைவில் ஒரு மணிமண்டபம் அமைக் கப்படும். அதற்கான உத்தரவை அதிகாரிக ளோடு நான் தொலைபேசியில் வழங்கி யிருக்கிறேன். வழங்கிவிட்டு தான் நான் இந்த மேடைக்கு வந்திருக்கிறேன். நாளையிலிருந்து அந்தப் பணி தொடங்கவிருக்கிறது.

### “திராவிடப் பொதுவுடமை முகமாக” இந்த மேடையைக் கருதுகிறேன்!

அடுத்து 1951ல் நடந்த தி.மு.க.வின் முதல் மாநில மாநாட்டுக்கு பேரறிஞர் அண்ணா அவர் கள் தோழர் ஜீவா அவர்களைதான் அழைத் தார். அன்றைக்கு அண்ணா என்ன சொன் னார் என்றால், “பெரியாரும் – நானும் ஜீவாவும் ஒரு இடத்திலிருந்து பணிபுரியும் காலம் எதிர்கா லத்தில் வரும். அது பொதுவுடைமை முகாமா கப் பெயர் மாற்றப்படும். அந்த முகாமில் திரா விட என்ற அடைமொழி இடம் பெற வேண்டும்” என்று குறிப்பிட்டுச் சொன்ன பேரறிஞர் அண் ணாவின் எண்ணம், இந்த மேடையில் நிறை வேறி இருப்பதாகத்தான் நான் கருதுகிறேன்.

நாடு கடுமையான சூழலை எதிர்கொண்டி ருக்கும் காலக்கட்டத்தில், கொள்கை உணர் வோடு நாமெல்லாம் இந்த மேடையில் கூடியி ருக்கிறோம். “திராவிடப் பொதுவுடைமை முகாமாக” தான் நான் இந்த மேடையை கரு துகிறேன்.

நம்முடைய தோழமை இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் இந்த மேடையில் இருக்கிறார் கள். நம்முடைய இந்த ஒற்றுமைதான் பலரு டைய கண்ணை உறுத்துகின்றது. “என்னடா… எத்தனை சதி செய்தாலும், எவ்வளவு குழப்பம் ஏற்படுத்தினாலும், எப்படிப்பட்ட போலிச் செய்தி களை எல்லாம் பரப்பினாலும் இவர்கள் ஒற்று மையாக இருக்கிறார்களே” என்று வாயில், வயிற்றில் அடித்துக் கொண்டு புலம்பிக் கொண் டிருக்கிறார்கள்.

### அடிமைத்தனம்பற்றி பழனிசாமி பேசலாமா?

அதிலும், எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக் கூடிய பழனிசாமி அவர்களுக்கு கம்யூனிஸ்டு கள் மேல் திடீர் என்று பாசம், குபீர் பாசம் பொத் துக்கொண்டு வந்திருக்கிறது. அடிமைத்த னத்தை பற்றி பழனிசாமி அவர்கள் பேசலாமா? பேசுவதற்கு அவருக்கு என்ன உரிமை இருக் கிறது? எங்களைப் பொறுத்தவரைக்கும், இங்கே இருக்கக்கூடிய யாருக்கும் யாரும் அடிமை இல்லை. அடிமைத்தனத்துக்கு எதிராக கிளர்ந்தெழுந்த இயக்கங்கள்தான் இங்கே இருக்கக்கூடிய இயக்கங்கள் திராவிட இயக்க மும், கம்யூனிஸ்ட் இயக்கமும்! கொள்கைக ளைப் பற்றி தெரியாத பழனிசாமி அவர்கள், விரக்தியில் வாய்க்கு வந்ததை எல்லாம் பேசுகி றார். அவருக்குத் தெரிந்தது அவ்வளவுதான்!

அதற்காக நம்முடைய கூட்டணித் தலைவர் களை மிக மிக மோசமாக கொச்சைப்படுத்துகிறார் கள். நான் கேட்க விரும்புவது, கம்யூனிஸ்ட் தலைவர்களைவிட நீங்கள் என்ன அதிகம் தியா கம் செய்துவிட்டீர்களா? நம்முடைய எழுச்சித் தலைவர் திருமாவளவன் அவர்களைவிட நீங் கள் என்ன பெரிய தியாகம் செய்துவிட்டீர்களா? இங்கே இருக்கக்கூடிய தலைவர்களை விட ஏதாவது ஒரு இடத்தில் நாங்கள் மிஞ்சி தியாகம் செய்திருக்கிறோம் என்று உங்களால் நிரூபிக்க முடியுமா? ஒடுக்கப்பட்ட மக்களுடைய உரிமை களுக்காக போராடிக் கொண்டிருக்கக்கூடிய இயக்கங்கள் இந்த இயக்கங்கள்.

### அவதூறுகளைப் பரப்பி கூட்டணியில் பிளவுபடுத்த சிலர் அலைகிறார்கள்!

அவர்களுக்கு இருப்பது மக்கள் மீதான உண்மையான அக்கறை இல்லை; பிரச்சி னைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பது அவர்கள் நோக்கம் இல்லை; புழுதிவாரி தூற்றி அவதூறுகளை பரப்பி நம்முடைய கூட்டணி தலைவர்களை களங்கப்படுத்த வேண்டும்; எப் படியாவது கூட்டணியில் விரிசல் ஏற்படுத்த வேண்டும் என்ற மலிவான நோக்கத்தோடு இன்றைக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் கூட்டணியில் இருக்கிறோம்; கூட்ட ணியில் இருந்தாலும், நியாயமான கோரிக்கை களை, விமர்சனங்களை வைக்க கம்யூனிஸ்ட் தோழர்கள் ஒருபோதும் தவறியதில்லை. நாங் களும் அவர்களுடைய கோரிக்கைகளை என் றைக்கும் நாங்கள் புறக்கணித்தது கிடையாது. அவர்களுடைய கருத்துகளைக் கேட்கிறோம்; விவாதிக்கிறோம்; பலவற்றில் உடன்படுகி றோம்; அதற்கான தீர்வை முன்னெடுக்கிறோம். இதுதான் ஜனநாயகம்! அதனால்தான் தோழ மைப் புரிதலுடன் எங்களுடைய கூட்டணிப் பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது!

நம்மைப் பொறுத்தவரைக்கும், சாதியவாதம் வகுப்புவாதம் பெரும்பான்மைவாதம் எதேச் சாதிகாரம் மேலாதிக்கம் ஆகியவற்றுக்கு எதி ராக ஜனநாயகச் சக்திகள் ஒற்றுமையாக பணி யாற்றவேண்டும்! ஏனென்றால், நம்முடைய இலட்சியம் பெரிது! அந்த இலட்சியத்திற்காகத் தான் நானும், நீங்களும் இந்த மேடையில் இருக்கிறோம்! ஜனநாயகம் சமூகநீதி சமதர்மம் சகோதரத்துவம் ஆகியவை நம்மை இணைத் திருக்கிறது! ஜனநாயகத்துக்கு விரோதமான வர்கள் சமூகநீதிக்கு எதிரானவர்கள் சமதர் மத்தை வெறுப்பவர்கள் சகோதரத்துவம் வள ரக்கூடாது என்று நினைப்பவர்கள் நம்முடைய தோழமையை, கூட்டணியைவிரும்பவில்லை. அதனால், நமக்குள்ள எப்படியாவது பிளவு ஏற் படுத்தலாம் என்று பார்க்கிறார்கள். நான் உறு தியோடு சொல்கிறேன் அவர்களுடைய சதித்திட் டங்கள் ஒருபோதும் நிறைவேறாது! அதனால்தான், இந்த மாநாட்டிற்கு தோழர் முத் தரசன் அவர்கள் ‘வெல்க ஜனநாயகம்’ ‘எழுச்சி மாநாடு’ என்ற பெயரில் இந்த மாநாட்டை அவர் எழுச்சியோடு ஏற்பாடு செய்திருக்கிறார்.

### தேர்தலையே கேலிக் கூத்தாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!

தோழர்களே… ஜனநாயகம்தான் இறுதியில் வெல்லும்! அதை வெல்ல வைக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் ஜனாயகச் சக்திகளான நமக்குதான் இருக்கிறது! அதிலும் இன்றைக்கு, ஜனநாயகத்துக்கு அடிப்படையான தேர்த லையே ஒன்றிய பா.ஜ.க. அரசு கேலிக்கூத் தாக்கி இருக்கிறது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு, தேர்தல் ஆணை யத்தை, தன்னுடைய கிளை அமைப்பாக மாற் றிவிட்டது. தன்னாட்சிப் பெற்ற தேர்தல் ஆணை யத்தை, ‘கீ கொடுத்தால் ஆடுகின்ற பொம்மை’யாக மாற்றிவிட்டார்கள். அதைத் தான் வருகின்றபோது நான் கேட்டுக் கொண்டே வந்தேன் - D.ராஜா அவர்கள் அதைப்பற்றி அழுத்தமாக, விளக்கமான இங்கே குறிப்பிட்டுச் சொன்னார். தேர்தல் ஆணையர்களுடைய நிய மனத்தில்தான் சதி செய்கிறார்கள் என்று பார்த் தால், வாக்காளர் பட்டியலில் இருந்தே தங்களு டைய சதியைத் தொடங்கிவிட்டார்கள்.

### தேர்தல் ஆணையத்தின் சதியை அம்பலப்படுத்திய ராகுலுக்கு நன்றி!

மக்களாட்சியைக் காக்க இந்தச் சதியை அம் பலப்படுத்தியுள்ள நம்முடைய மக்களவை எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடியவர் அருமைச் சகோதரர் ராகுல் காந்தி அவர்க

> **நம்முடைய தோழமை இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் இந்த மேடையில் இருக்கிறார்கள். நம்முடைய இந்த ஒற்றுமைதான் பலருடைய கண்ணை உறுத்துகின்றது. “என்னடா… எத்தனை சதி செய்தாலும், எவ்வளவு குழப்பம் ஏற்படுத்தினாலும், எப்படிப்பட்ட போலிச் செய்திகளை எல்லாம் பரப்பினாலும் இவர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்களே” என்று வாயில், வயிற்றில் அடித்துக் கொண்டு புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.**

ளுக்கு இந்த மேடையில் இருந்து என்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் நான் தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சகோதரர் ராகுல் காந்தி அவர்கள் வைத்தி ருக்கக்கூடிய இந்த குற்றச்சாட்டுகளுக்கு முறை யான பதில் அளிக்காத தேர்தல் ஆணையம், அவரைப் பிரமாணப் பத்திரம் கொடுக்கச் சொல்லி கட்டளை இடுகின்றது.

## பொதுவுடமை இயக்கத்துடனான நட்பு கொள்கை நட்பு!

### கடமை தவறிய தேர்தல் ஆணையம்!

தேர்தல் நடைமுறைக்கு அடிப்படை ஆவ ணமே வாக்காளர் பட்டியல்தான். அதை துல்லி யமாகவும், தவறுகள் இல்லாமலும் தயாரிப்பது தான் சுதந்திரமான, நேர்மையான தேர்தலுக்கு முக்கியம்! அதைக்கூட தேர்தல் ஆணையத் தால் சரியாக செய்ய முடியாதா? அரசியல் சட்டம் வழங்கியிருக்கின்ற கடமையில் இருந்து தேர் தல் ஆணையம் தவறிவிட்டது.

தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநிலங்களில் தேர்தல் நடைமுறைகள் தொடங்குவதற்கு முன்பு, சுதந்திரமான, நேர்மையான முறை யில் வாக்காளர் பட்டியலை சரிபார்த்து உறுதிப் படுத்துகின்ற பணியை தேர்தல் ஆணையம் நிறைவேற்ற வேண்டும்.

ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசு அமைந்தால் என்னவெல்லாம் நடக்கும் என்று நாம் எச்சரிச் சது எல்லாம் இப்போது நடைபெறுகின்றது.

### விடுதலை நாள் உரையில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை புகழ்ந்து பேசிய பிரதமர் மோடி!

இந்தி மொழியைக் காட்டாயமாக்கியது, சமஸ்கிருதம் மேல் இருக்கின்ற பற்றால்தான் என்று நாம் சொன்னது உண்மையாகி இருக் கிறது. பட்டப்படிப்பு படிக்காமலேயே, ‘பாரம்பரிய குருகுலத்தில்’ படித்த, நன்றாக கவனியுங்கள் ‘பாரம்பரிய குருகுலத்தில்’ படித்தவர்கள் ஐ.ஐ.டி. நிறுவனங்களில் மாதம் 75 ஆயிரம் ரூபாய் உதவித்தொகையுடன் சேரலாம் என்று திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ். அமைப்பை முன்னிலைப்படுத்துவார்கள் என்று சொன்னோம்… இப்போது நாட்டின் பிர தமரே, விடுதலை நாள் விழா உரையில், ஆர். எஸ்.எஸ்ஐ புகழ்ந்து பேசியிருக்கிறார். அரசு வெளியிடுகின்ற விளம்பரங்களில், அண்ணல் காந்தியின் மீது சாவர்க்கர் படம் இன்றைக்கு இருக்கிறது. இதுதான் இன்றைய அவல நிலை!

### அமைச்சர் ஐ.பெரியசாமி வீட்டில் ரெய்டு! அடக்குமுறைக்கு அஞ்சுபவர்கள் அல்ல நாங்கள்!

அமலாக்கத் துறையை வைத்து தங்களுக்கு ஒத்துவராத எதிர்க்கட்சிகளை மிரட்டுவார்கள் என்று சொன்னோம். தொடர்ந்து ரெய்டு நடத்து கிறார்கள். இன்றைக்குக்கூட, மாண்புமிகு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் வீட்டில் ரெய்டு நடத்தியிருக்கிறார்கள்.

உறவினர் வீட்டில் ரெய்டு விட்டவுடனே ஓடி வந்து கூட்டணியில் சேர்ந்து கொள்வதற்கு நாங் கள் என்ன பழனிசாமியா?

எங்களை மிரட்ட நினைத்தவர்கள் தான் மிரண்டு போயிருக்கிறார்கள்! இதைவிட மோச மான அடக்குமுறையை எல்லாம் பார்த்த இயக் கம்தான் தி.மு.க! நெருப்பாற்றில் நீந்தியே பழக் கப்பட்டவர்கள் நாங்கள்! உங்களுடைய எண்ணம் எந்தக் காலத்திலும் நிறைவேறாது! வழக்கம்போல தமிழ்நாட்டு மக்கள் உங்களுக் குத் தோல்வியைத்தான் கொடுப்பார்கள்!

தமிழ்நாட்டு மக்கள் அரசியல் தெளிவு உள் ளவர்கள்; விழிப்புணர்வு மிக்கவர்கள்! தமிழுக் கும் தமிழினத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் உண் மையாக தொண்டாற்றுபவர்கள் யார் என்று தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும். சமூகநீதி சமநீதி மாநில உரிமை – கூட்டாட்சி தத்துவம் மொழி உணர்வு இன எழுச்சி ஆகி யவற்றிற்காக, உண்மையாக உழைத்து தியா கங்கள் செய்தது யார்? நவீனத் தமிழ்நாட்டின் அனைத்து வளர்ச்சிகளுக்கும் அடித்தளம் அமைத்தது யார் என்று தமிழ்நாட்டு மக்க ளுக்கு நன்றாகவே தெரியும்!

2021ல் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக் குக் கூட்டணி வெற்றி பெற்றது போலவே, 2026லும் நாம் தான் வெற்றி பெறப்போகி றோம்!

திராவிட மாடல் 2.0 ஆட்சியில், இந்தியா வுக்கே வழிகாட்டுகின்ற அளவிற்கு சாதனை களை செய்வோம்!

### நம் கூட்டணிக் கட்சிகளின் உழைப்புக்கு முன்னால் சதிச் செயல்கள் நிற்க முடியாது!

அதற்குத் துணையாக தோழர்கள் என்றைக் கும் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கம்யூனிஸ்டுகள் களத்தில் இறங் கினால், எப்படிப்பட்ட வெற்றியும் வசமாகும்! தி.மு.க.வினர் கம்யூனிஸ்டுகள் நம்முடைய கூட்டணிக் கட்சியினர் ஆகியோருடைய உழைப்புக்கு முன்னால், எப்படிப்பட்ட சதிச்செ யல்களும் நிற்கக்கூட முடியாது. ஜனநாயகம் வெல்ல களம் நிற்கும் அத்தனைத் தோழர்களுக் கும் என்னுடைய ரெட் சல்யூட்!

இன்றைக்கு ஆட்சியைப் பொறுத்தவரைக் கும், அனைத்துத் துறைகளிலும் முதலிடம், முதலிடம், முதலிடம் என்று ஏதோ நாங்கள் சொல்லவில்லை – ஒன்றியத்தில் இருக்கக்கூடி யவர்களே ஆய்வு செய்து இன்றைக்கு அந்த ஆய்வை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. எல் லாவற்றிலும் முதலிடம், முதலிடம் என்று பெறக் கூடிய நம்முடைய கூட்டணி, நம்முடைய மதச் சார்பற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் இருக்கக்கூடிய இந்த கூட்டணி மிகப் பெரிய அளவில் வெற்றி பெறும், வெற்றி பெறும், வெற்றி பெறுவதற்கு உறுதி எடுப்போம்! உறுதி எடுப்போம்! என்று கேட்டு, இந்தச் சிறப் புக்குரிய இந்த 26வது மாநில மாநாட்டில், உங் களோடு சேர்ந்து நானும் பங்கேற்கக்கூடிய நல்லதொரு வாய்ப்பைப் பெற்று, என்னுடைய பெயரே ஸ்டாலின் – தலைவர் கலைஞர் அவர் கள் அடிக்கடி சொல்வார்கள் – அண்ணாவை பார்க்காவிட்டால், பெரியாரை பார்த்திருக்காவிட் டால், நானும் இன்றைக்கு கம்யூனிஸ்டில் இருப் பேன் என்று தலைவர் கலைஞர் சொல்வார். அதே உணர்வோடு தான் நானும் இருக்கிறேன் – அந்த உணர்வோடு தான் நானும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறேன் என் பதை மாத்திரம் எடுத்துச் சொல்லி, வாழ்க! வெல்க கம்யூனிசம் என்று சொல்லி, விடைபெ றுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் உரையாற்றினார்.